வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 08.05.2025 வியாழக்கிழமை இதழ் : 129 பக்கங்கள் : 12




# வடக்கில் தமிழரசு முன்னிலை! இரண்டாவது தமிழ் காங்கிரஸ்!!

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தேசிய மக்கள் சக்தி அடுத்த இடங்களில்

யாழ்ப்பாணம், மே 08

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் போட்டியிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ளது.**

இதேநேரம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஈ.பி.டி.பி ஆகியன குறிப்பிடத்தக்க சில சபைகளில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

அதனடிப்படையில் மாவட்ட ரீதியான முடிவு அடிப்படையில்-

**யாழ்.தேர்தல் மாவட்டம்**

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் காணப்படும் 17 உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்.மாநகர சபை, நெடுந்தீவு பிரதேச சபை, வேலணை பிரதேச சபை, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, வலிகாமம் வடக்கு பிரேதேச சபை, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை, பருத்தித்துறை பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை ஆகிய 12 சபைகளில் முதன்மை பெற்றுள்ளது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பருத்தித்துறை நகர சபை, வல்வெட்டித்துறை நகரசபை ஆகிய இரண்டு சபைகளில்

11

## எம்மை நாமே ஆள்வதற்காக மக்கள் ஆணை தந்துள்ளனர்!

சிவாஜிலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே. 08

ஜே.வி.பியின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை தவறு என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இந்த வெற்றி எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்கு தந்த ஆணையாக பார்க்கின்றேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய பேரவையின் வல்வெட்டித்துறை நகர சபை முதன்மை வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

11

## யாழ்.மாநகர முதல்வர் பதவி தமிழரசுக் கட்சிக்கே உரியது!

சொல்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், மே. 08

யாழ்ப்பாணம் மாநகர சபையைப் பொறுத்தவரை இலங்கை தமிழரசுக் கட்சிக்கே அதிகளவான ஆசனம் கிடைக்கப் பெற்றது. ஆகையால் மாநகர முதல்வர் பதவி இலங்கை தமிழரசுக் கட்சிக்கே உரித்தானது. ஏனைய கட்சிகள் அதனை அனுசரித்து எமக்கான ஆதரவை கொடுக்கவேண்டும் என்பது எங்களுடைய வேண்டுகோள் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன்

11

## கூட்டணி அமைக்கும் எண்ணம் கிடையாது!


அறிவித்தார் ரில்வின் சில்வா

கொழும்பு, மே. 08

மக்கள் நிராகரித்த எந்தவொரு கட்சியுடனும் கூட்டணியை அமைத்து, உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியமைக்கும் எண்ணம் தேசிய மக்கள் சக்திக்கு இல்லையென மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

11



## உலக வங்கியின் தலைவர் ஜனாதிபதியை சந்தித்தார்

கொழும்பு, மே 08

இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கிக் குழுமத்தின் தலைவர் அஜய் பங்காவுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகே உலக வங்கியின் தலைவர் ஒருவர் இலங்கைக்கு வருகை

11

## தேசிய மக்கள் சக்திக்கே அதிகப்படியான வாக்குகள்

கொழும்பு, மே. 08

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் பெறப்பட்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அதிகப்படியான வாக்குகளை பெற்று மக்கள் பலத்தை நிரூபித்துள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கிய தேசிய மக்கள் சக்தி 45 இலட்சத்து 3 ஆயிரத்து

11

## வவுனியா மாநகர சபையில் தமிழரசுவுக்கு பின்னடைவு!

வவுனியா, மே. 08

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி வவுனியா மாநகர சபையில் ஒரு வட்டாரத்தில்கூட நேரடியாக வெற்றி பெறாது பின்னடைவைச் சந்தித்துள்ளது.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட தமிழ் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தியை பின்தள்ளி இலங்கை தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. எனினும் வடக்கின் நுழைவாயிலாக விளங்கும் வவுனியா மாநகர சபையில்

11

## ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து முக்கிய நபர் விரைவில் கைது!

கொழும்பு, மே. 08

எதிர்வரும் ஒரு சில வாரங்களுக்குள் ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்து முக்கிய அரசியல்வாதியொருவர் கைது செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த கோட்டாபய ஆட்சியில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த உரம் மோசடி தொடர்பில் ராஜபக்ஷ குடும்பத்தின் இளம் அரசியல்வாதியான சஷீந்திர ராஜபக்ஷவை கைது செய்வதற்கான விசாரணைகள் தற்போது தீவிரம்

11

## வடக்கு சபைகளில் ஆட்சி அமைக்க அரசிடம் ஆதரவு கோரும் கட்சிகள்?

கொழும்பு, மே. 08

வடக்கில் உள்ள எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திலும் எந்த அரசியல் கட்சிகளும் முழுமையான பெரும்பான்மையைப் பெறாததால், வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் வடக்கில் சபைகளை நிறுவ தேசிய மக்கள் சக்தியிடம் கோரிக்கை விடுத்துள்ளன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.

வடக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதாகவும், சில கட்சிகள் வடக்கில் சபைகளை அமைக்க தங்கள் ஆதரவை வழங்கியுள்ளன என்றும் அவர் கூறினார்.

வடக்கில் 150 இடங்களைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

பெரும்பான்மை

11

## வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எங்களுக்கு பின்னடைவு இல்லை!

பெரு வெற்றி என்கிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, மே. 08

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பின்னடையவில்லை. தமிழ் மக்கள் தேசிய அரசியலில் எம்முடன் கைகோர்த்ததைப் போன்று பிரதேசவாரியான அரசியலிலும் எம்முடன் ஒன்றிணைந்துள்ளார்கள் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சரிவு!

## சுட்டிக்காட்டுகிறார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, மே. 08

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வாக்கு வங்கியில் ஏற்பட்டிருக்கும் சரிவைக் காட்டுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

அவரது அதிகாரபூர்வ பேஸ்புக் தளத்தில் பதிவொன்றை இட்டு இதனைக் கூறி யுள்ளார்.

வாக்கு வங்கியில் ஏற்பட்ட வீழ்ச்சி, அரசாங்கத்தின் பல வீனத்தைக் காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி அதிகரித்து வருவதாக தெரிவித்த அவர், இந்த அதிகரிப்பு போதுமானதாக இல்லை எனச் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், இந்த உந்துதல் ஒரு புதிய ஆரம்பத்தை வெளிப்படுத்துகிறது என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

# வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு கிளிநொச்சியில் நேற்று வரவேற்பு

கிளிநொச்சி, மே. 08

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பாக, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதேச சபைகளில் வெற்றி பெற்ற உறுப்பினர்களை வர வேற்கும் நிகழ்வு, இன்று, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் இடம் பெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்ட உறுப்பினர்கள் அதன் பின்னர், கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்திலும் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு உறுப்பினர்கள் வழிபாடுகளுக்கு சென்றபோது, பொலிஸார் அவர்களை வழி மறித்து பேரணி நடத்த முடியாது என தெரிவித்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் விளக்கமளிக்கப்பட்டது. (அ)

# விசேட சுற்றிவளைப்பில் 25 பேர் கைது!

கொழும்பு, மே. 08

நாடளாவிய ரீதியில் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப் பொருட்களுடன் 25 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹெரோயின் போதைப் பொருளுடன் 8 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 12 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 2 பேரும்,

போதை மாத்திரைகளுடன் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது,

108 கிராம் 630 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும்,

25 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும்,

128 கிலோ கஞ்சா போதைப் பொருளும், 105 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி!

முல்லைத்தீவு, மே. 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

தற்போது சீரற்ற காலநிலை நிலவி வரும் நிலையில் நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கள்ளியடி வயலில் வேலை செய்துகொண்டிருந்த குடும்பஸ்தர் மீது மின்னல் தாக்கிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் புதுக்குடியிருப்பு பிரதேச ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்டது.

இந்த சம்பவத்தில் 42 வயதான அருமைநாயகம் யசோதரன் என்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். (அ)

# போலி பொலிஸ் அதிகாரிகள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மே. 08

பொலிஸ் அதிகாரிகள் என கூறி பல்வேறு பிரதேசங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்களிடமிருந்து பெறுமதியான பொருட்களை அபகரிக்கும் கும்பல் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான கும்பல் தொடர்பில் தகவல் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகளின் பெயருக்கு கலங்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறான கும்பலுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# பல்கலை மாணவன் மீது தாக்குதல்; 7 மாணவர்கள் பிணையில் விடுதலை

கொழும்பு, மே. 08

சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனை தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்ட 7 பல்கலைக்கழக மாணவர்களை பிணையில் விடுதலை செய்ய ஹோமாகம நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

ஹோமாகம பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 7 பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

7 பல்கலைக்கழக மாணவர்களும் தலா மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். (அ)

# கொழும்பு மாநகர சபையில் நாம் எதிரணிகளுடன் இணைந்து ஆட்சி!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மே. 08

எதிரணிகளுடன் இணைந்து கொழும்பு மாநகரசபையில் ஆட்சி அமைப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

கொழும்பு மாநகரசபையில் ஆளுங்கட்சிக்கு 48 இடங்களே கிடைத்துள்ளன. எதிரணிகளுக்கு 60 வீத வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, எதிரணிகள் ஒன்றிணைந்து கொழும்பு மாநகர சபையில் ஆட்சியை நிறுவுவோம்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரை மேயர் வேட்பாளர் ஆக்குவோம் - என்றார். (அ)

# தமிழ்க் கூட்டமைப்பில் இருந்தோர் மீளச் சேர்ந்தியங்கவேண்டிய நேரம்!

## கூறுகின்றது தமிழரசுக் கட்சி

யாழ்ப்பாணம், மே. 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தவர்கள் சேர்ந்து இயங்கவேண்டிய நேரம் வந்துள்ளது. கூட்டமைப்பில் இருந்தவர்கள் எங்களுக்கு(இலங்கை தமிழரசுக் கட்சிக்கு) ஆதரவளிக்கும்போது பெரும்பாலான இடங்களில் நிர்வாகத்தை அமைக்கக் கூடியதாக இருக்கும்

என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. தமிழ் மக்கள் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு கொடுத்த வெற்றியை மிகவும் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கில் 58 சபைகளில் போட்டியிட்டது. இந்த 58 சபைகளில் 10 இற்கும் மேற்பட்ட சபைகள் தமிழர்களுக்கு பெரும்பான்மை இல்லாத சபைகளாகக் காணப்படுகின்றன. குறைந்தது 40 சபைகளில் நாங்கள் நிர்வாகங்களை அமைப்பதற்கு ஏற்ற வகையில் முடிவுகள் வெளிவந்துள்ளன.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்து ஆறு மாத காலத்துக்குள் தமிழ் மக்கள் மீண்டும் இலங்கை தமிழரசுக் கட்சி மீது நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பது தெளிவாக பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றது.

பாராளுமன்றத் தேர்தலில் ஒரு தவறான விம்பம் ஒன்று ஏற்பட்டது. 25 வீதமான வாக்கை பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் உள்ள 6 ஆசனங்களில் 3 ஆசனங்கள் கிடைத்திருந்தன. 25 வீதமான வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு 50 வீதமான ஆசனங்கள் கிடைத்திருந்தன. அதனை வைத்துக்கொண்டு தேசிய மக்கள் சக்தியினர். யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்களுடைய ஆணை தங்களுக்கு வந்துவிட்டது என அவர்கள் கூறித்திரிந்தார்கள்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழ[illegible]பில் பெரு வெற்றி பெற்றிருந்தது. அதுபோல் உள்ளூராட்சித் தேர்தலிலும் பெரு வெற்றி பெற்றிருக்கின்றது. வடக்கில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பெரு வெற்றியை பெற்றிருக்கின்றோம். வவுனியா மாவட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டதற்கான காரணங்களை அறிந்து உடனடியாக அதனை நிவர்த்தி செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒரு மாற்றம் நிகழ்ந்ததாகச் சொன்னார்கள். ஆனால் ஆறு மாதங்களுக்குள் மீண்டும் ஒரு மாற்றம் இடம்பெற்றிருக்கிறது. இதற்கு காரணம், தமிழ் மக்களின் அடையாளம் எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்க முடியாதது என்பது பாராளுமன்ற தேர்தலுக்குப் பிற்பாடு மக்களின் மனதில் ஆழமாக பதிந்துள்ளது. அது இந்தத் தேர்தலில் வெளிவந்திருக்கிறது.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்கின்றபோது ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி முடிவுகளை எடுப்போம். உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்தி மக்களுக்கு தேவையான சேவைகளை மேற்கொள்ளுவோம். எங்கள் கட்சிகளிலிருந்து தெரிவாகிய உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கி அனைத்து சபைகளிலும் திறமையான நிர்வாகங்களை மேற்கொள்ளுவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள் தற்போது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக இயங்குகிறார்கள். அவர்கள் எங்களுக்கு ஆதரவளிக்கும்போது பெரும்பாலான இடங்களில் நிர்வாகத்தை அமைக்கக் கூடியதாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்துவிட்டது என்ற செய்தியை ஆரம்பத்திலிருந்தே மறுத்திருக்கின்றேன். ஏனெனில் கடந்த பாராளுமன்ற காலம் முடிவடையும் வரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே பாராளுமன்றக்குழு இயங்கிவந்தது. ஆனால் தேர்தல் வந்த போது தனித்து போட்டியிட்டார்கள். உண்மையில் பாராளுமன்றத் தேர்தலில் தனித்து போட்டியிடுவது தவறானது. உள்ளூராட்சித் தேர்தலிலேயே தனித்து போட்டியிடுவது பயனுள்ளதாக அமையும் என்பது இந்தத் தேர்தலில் நிருபணமாகியுள்ளது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.05.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் சொல்வது?

வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சிகள் மீண்டும் முன்னிலை பெற்றிருக்கின்றன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றிருந்த தேசிய மக்கள் சக்தி பின்னடைவை சந்தித்திருக்கின்றது. இந்த நிலைமையை தமிழ்த் தேசியத்தின் வெற்றி என்று அழுத்திக் கூறுவது சரியானதா?

நிச்சயமாக இல்லை. ஏனெனில், இவ்வாறான வாக்களிப்புகள் கடந்த காலத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்த காலத்தில் இதனை விடவும் திரளாக தமிழ் மக்கள் கூட்டமைப்பின் பின்னால் நின்றிருக்கின்றனர். அதனால் அரசியலில் என்ன மாற்றம் நிகழ்ந்தது? இந்தக் கேள்விக்கு, இல்லை என்பதைத் தவிர வேறு சிறப்பான பதில் இருக்க வாய்ப்பில்லை.

ஒரு பிரதான எதிரியை காண்பித்து அச்சத்தை ஏற்படுத்தினால் தமிழ் வாக்காளர்களை வளைக்க முடியும் என்னும் தந்திரோபாயம் தமிழ் கட்சிகளுக்கு கைகொடுத்திருப்பதாகவே தெரிகின்றது. தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் விரக்தியும் சங்கடமும் ஏற்பட்டமைக்கு ஒரு பிரதான காரணம் உண்டு. அதாவது, தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவம் செய்யும் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பற்ற பேச்சும், செயலுமே பிரதான காரணங்களாகும்.

அவர்கள் அதிகம் பொறுப்புடனும், நிதானமாகவும் பேசியிருந்தால், தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டளவு ஆதரவை பெற்றிருக்கவும் வாய்ப்பிருந்தது. ஆனாலும், வடக்கு மகாணத்தில் இரண்டாவது நிலையில் தேசிய மக்கள் சக்தி இருக்கின்றது என்பதையும் இலகுவில் தவிர்த்துச் செல்ல முடியாது. அதேவேளை தமிழ்த் தேசிய அரசியலை முன்னிலைப்படுத்தும் தமிழ்க் கட்சிகள் முடிந்தவரையில் அதிகம் இணைந்து போட்டியிட்டிருந்தால், தேசிய மக்கள் சக்தி இன்னும் பின்னுக்குச் சென்றிருக்கும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், மாகாண சபைத் தேர்தலில் தமிழ் கட்சிகள் என்போர், வழமைபோல், தங்களுக்குள் சண்டையிட்டு, பிரிந்து போட்டியிட்டால் மாகாண சபைத் தேர்தலில் நிச்சயம் பின்னடைவை சந்திக்க நேரிடும். ஒரு வேளை சைக்கிள் சின்ன அணியினர் இணைந்து போட்டியிடுவதைத் தவிர்த்தாலும் கூட, ஏனைய கட்சிகள் ஒரணியாக போட்டியிட வேண்டிய தேவை தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும். அரசியலில் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாலான நிர்ப்பந்தங்கள் என்று ஒன்றிருக்கின்றன. அரசியலில் நிர்ப்பந்தங்களை, அரசியல் தலைவர் என்போர் நிராகரித்துச் செயல்படுகின்ற போது, அதன் விளைவுகளை அனைவருமே சுமக்க நேரிடும்.

கடந்த காலத்தில் நிகழ்ந்த விடயங்கள் இதற்கு சிறந்த சான்றாக இருக்கின்றன. எனவே, உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியை 'தமிழர் தாயகம் தமிழரசோடு' என்றவாறு, உணர்ச்சிவசமாக கொண்டாட முற்படாமல், நிதானமாகவும் தூரநோக்குடனும் விடயங்களை ஆராய்வதற்கான வாய்ப்பாகக் கொள்வதுடன், எதிர்காலத்தை கருத்தில் கொண்டு செயல்படுவதற்கான பாடமாகவும் இதனைக் கொள்ள வேண்டும். அரசியலில் கிடைக்கும் ஒவ்வோர் அனுபவங்களிலிருந்தும் கற்றுக்கொள்ள மறுத்தால், தொடர்ந்தும் பின்னடைவுகள் மட்டுமே நிரந்தரமானதாக இருக்கும்.

## முன்னாள் அமைச்சர் கெஹலிய மீண்டும் கைது

கொழும்பு, மே 08

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழு அதிகாரிகளால் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள் ளார்.

கெஹலிய ரம்புக்வெல வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவில் நேற்றைய தினம் முன்னிலையாகிய போதே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், கெஹலிய ரம்புக்வெலவை கொழும்பு பிர தான நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

(எ)



## போலி பொலிஸ் அதிகாரிகள் குறித்து பொதுமக்களுக்கு விசேட அறிவுறுத்தல்

கொழும்பு, மே 08

பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறி பல்வேறு பிரதேசங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்களிடமிருந்து பெறுமதியான பொருட்களை அபகரிக்கும் கும்பல் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இவ்வாறான கும்பல் தொடர்பில் தகவல் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகளின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறான கும்பலுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

(எ)

## விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் போதைப்பொருட்களுடன் 25 பேர் கைது

கொழும்பு, மே 08

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 08 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 12 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 02 பேரும், போதை மாத்திரைகளுடன் 03 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 108 கிராம் 630 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 25 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 128 கிலோ கஞ்சா போதைப் பொருளும், 105 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(எ)

## பாதாள குழு தலைவரின் சகாக்கள் கைது

கொழும்பு, மே 08

பாணந்துறை - ஹிரண பிரதேசத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பாதாள உலகக் குழுவின் தலைவரின் சகாக்கள் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு - கொம்பனி வீதி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யூனியன் பிளேஸில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் இருவரும் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மருதானை மற்றும் கொழும்பு 13 ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 21 மற்றும் 25 வயதுடையவர்கள் ஆவர்.


சந்தேக நபர்கள் இருவரும் பாணந்துறை - ஹிரண பிரதேசத்தில் நபரொருவரை சுட்டுக்கொலை செய்வதற்கு துப்பாக்கிதாரிகளுக்கு துப்பாக்கி மற்றும் வான் வழங்கி உதவி செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனிவீதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**இடபம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். நீண்ட நாட்களாக வரவேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
தணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திருப்பங்கள் நிறைந்த நாள்.

**சிம்மம்**
வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள் .

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும் உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**விருச்சிகம்**
நீண்ட நாள் ஆசையில்ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**கும்பம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள்.மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள்.உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

# 323 கிலோ கேரளக் கஞ்சாவுடன் யாழ்ப்பாணத்தில் மூவர் கைது



யாழ்ப்பாணம், மே 08

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக பெருமளவு கஞ்சாவை கடத்தி வந்த மூவரை கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

எழுவைதீவு கடற்பரப்பில் வைத்து 323. 35 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் மன்னார் பேசாலை பகுதியையும், மற்றைய இருவர் குருநகர் பகுதியையும் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# சைவநாதம் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மே 08

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினரால் 2025 ஜூன் மாதம் முதலாம் திகதி நடத்தப்படவுள்ள சைவப்புலவர் பட்டமளிப்பு மற்றும் சைவ மாநாட்டில் வெளியிடப்படவுள்ள சைவநாதம் - 12 மலருக்கான ஆக்கங்கள் சைவப்புலவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன என சைவப்புலவர் சங்க செயலாளர் செ.த. குமரன் அறிவித்துள்ளார்.

அனுப்ப வேண்டிய ஆக்கங்கள் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பாடத்திட்டத்துக்கு உட்பட்டதாக இதுவரையில் சைவநாதம் மலரில் வெளிவராத கட்டுரைகளாக அமைதல் வேண்டும். கட்டுரைகள் அச்சுப்பதிப்பு 4 பக்கங்களுக்கு மேற்படாதவாறு மென் பிரதியாக Saivappulavar sangam1960@gmail.com மின்னஞ்சலுக்கு எதிர்வரும் 15. 05. 2025 திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என அவர் மேலும் அறிவித்துள்ளார்.

(எ)

# பொற்கலம்தம்பை வைரவர் ஆலயத்தில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 08

தெல்லிப்பழை தென்மேற்கு அருள்மிகு பொற்கலம்தம்பை ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் இரவு 07.00 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. அந்தவகையில் சைவப் புலவர்கள் கந்த. சத்தியதாசன், ச. முகுந்தன், செ. த. குமரன், பொன். சந்திரவேல் மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன், த. மனோஜ்குமார் ஆகியோர்களின் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

(எ)

# முல்லைத்தீவு முழுமையாக தமிழ் அரசு கட்சி வசமானது

முல்லைத்தீவு, மே 08

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முல்லைத்தீவில் நான்கு பிரதேச சபைகளையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை, புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆகிய 4 பிரதேச சபைகளையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி - 1,364 வாக்குகளைப் பெற்று 4 உறுப்பினர்களையும் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி - 6,306 வாக்குகளைப் பெற்று 7 உறுப்பினர்களையும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி - 10,816 வாக்குகளைப் பெற்று 11 உறுப்பினர்களையும் துணுக்காய் பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி - 1,594 வாக்குகளைப் பெற்று 4 உறுப்பினர்களையும் பெற்றுள்ளது.

(எ)

# எந்தவித வன்முறைகளும் இன்றி மன்னாரில் தேர்தல் நடைபெற்றது

## தெரிவத்தாட்சி அலுவலகர் தெரிவிப்பு

மன்னார், மே 08

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 07.00 மணியளவில் ஆரம்பமான உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு மாலை 04.00 மணியுடன் நிறைவடைந்தது. இந்த நிலையில், எந்தவிதமான வன்முறைகளும் இன்றி மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெற்றதாக தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகர் க. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் 88 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 91 ஆயிரத்து 373 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றனர்.

இந்த நிலையில் 64 ஆயிரத்து 904 பேர் வாக்களித்துள்ளனர்.

இதனடிப்படையில் மாவட்டத்தின் முழுமையான வாக்குப் பதிவு 70.15 ஆக காணப்படுகின்றது.

மன்னார் நகர சபைக்கு 10,975 வாக்குகளும், மன்னார் பிரதேச சபைக்கு 16,939 வாக்குகளும், நானாட்டான் பிரதேச சபைக்கு 12,343 வாக்குகளும், முசலி பிரதேச சபைக்கு 10,819 வாக்குகளும், மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 13,636 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் 2025 - வடக்கு மாகாண முடிவுகள்

**தேர்தல் மாவட்டம் : யாழ்ப்பாணம்**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 9,881 - 11 |
| தேசிய மக்கள் சக்தி | 7,908 - 9 |
| தமிழ்க் காங்கிரஸ் | 5,047 - 5 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 4,543 - 5 |
| சுயேச்சைக் குழு 01 | 1,910 - 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,862 - 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணி | 946 - 1 |
| சுயேச்சைக் குழு 02 | 531 - 1 |

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 6,896 -8 |
| தேசிய மக்கள் சக்தி | 5,424 - 6 |
| தமிழ்க் காங்கிரஸ் | 4,159-5 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 3,732-4 |
| சுயேச்சைக் குழு 01 | 1,910 - 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | **1,675 - 2** |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணி | **1,675-2** |
| ஐக்கிய மக்கள் சக்தி | **917-1** |

## வேலணை பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,673-8 |
| தேசிய மக்கள் சக்தி | 1,840-4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணி | 1,313-3 |
| தமிழ்க் காங்கிரஸ் | 976-2 |
| சுயேச்சைக் குழு 01 | 492-1 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 450-1 |
| சுயேச்சைக் குழு 02 | 318-1 |
| ஐக்கிய தேசிய கட்சி | 314-1 |
| சுயேச்சைக் குழு 03 | 196-1 |

## காரைநகர் பிரதேச சபை

| | |
|---|---|
| சுயேச்சைக் குழு | 1350-2 |
| தேசிய மக்கள் சக்தி | 1044-2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 909-2 |
| தமிழ்க் காங்கிரஸ் | 833-2 |
| ஐக்கிய தேசிய கட்சி | 604-2 |
| தமிழரசுக் கட்சி | 442-1 |

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 7,233-11 |
| தமிழ்க் காங்கிரஸ் | 3,619-6 |
| தேசிய மக்கள் சக்தி | 5,675-9 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 2,261-3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணி | 1,655-3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,106-2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 694-1 |

## பருத்திரை நகர சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | |
| தமிழரசுக் கட்சி | 1,518 - 4 |
| தேசிய மக்கள் சக்தி | 736 - 2 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 665 - 2 |
| சுயேச்சைக் குழு | 335 - 1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 213- 1 |

## சாவச்சேரி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 6,938 - 8 |
| தமிழரசுக் கட்சி | 5,918-7 |
| தேசிய மக்கள் சக்தி | 5,234-5 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 4,310-5 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,414-1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | **650- 1** |

## யாழ்ப்பரணம் மாநகர சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | **10,370-13** |
| தமிழ்க் காங்கிரஸ் | **9,124-12** |
| தேசிய மக்கள் சக்தி | **7,702-10** |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | **3,567-4** |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | **3,076-4** |
| ஐக்கிய தேசிய கட்சி | **587-1** |
| ஐக்கிய மக்கள் சக்தி | **464-1** |

## சாவச்சேரி நகர சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 2,959-6 |
| தமிழரசுக் கட்சி | 2,594-6 |
| தேசிய மக்கள் சக்தி | 1,445-3 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 738-2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 535-1 |

## வல்வெட்டித்துறை நகர சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 1,558-7 |
| தமிழரசுக் கட்சி | 1,299-5 |
| தேசிய மக்கள் சக்தி | 676-3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 90-1 |

## நெடுந்தீவு பிரதே சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 974-6 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 752-4 |
| தேசிய மக்கள் சக்தி | 412-2 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 151-1 |

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 14 |
| தமிழ்க் காங்கிரஸ் | 3 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 1 |

## நெடுந்தீவு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 974-6 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 752-4 |
| தேசிய மக்கள் சக்தி | 412-2 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 158-1 |

## வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 6,995 - 13 |
| தமிழ்க் காங்கிரஸ் | 4,225-7 |
| தேசிய மக்கள் சக்தி | 3,329-6 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 2,512-4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,165-2 |

## பருத்தித்துறை பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | **7,490-9** |
| தேசிய மக்கள் சக்தி | **3,892-4** |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | **3,684-4** |
| சுயேச்சைக் குழு | **1,363-2** |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | **927-1** |

## நல்லூர் பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,576-7 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 4,921-6 |
| தேசிய மக்கள் சக்தி | 2,820-3 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 2,095-3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 986-1 |

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

| | |
|---|---|
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 4 |
| தமிழ்க் காங்கிரஸ் | |
| தேசிய மக்கள் சக்தி | |
| தமிழரசுக் கட்சி | |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | |

## ஹாலிஎல விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 08

ஹாலிஎல - கெடவல வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த வீதியில் பயணித்த ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த நபர் பதுளை வைத்தியசா லையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்துள் ளார்.

பதுளை ஹேகொட பகுதியைச் சேர்ந்த 69 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர் பான மேலதிக விசா ணைகளை ஹாலிஎல பொலிஸார் ஆரம்பித் துள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் 2025 - மன்னார் மாவட்ட முடிவுகள்

### மன்னார் பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,577 - 05 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,520 - 04 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 3,400 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,944 - 03 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2,124 - 02 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 1,450 - 02 |
| தமிழ்க் காங்கிரஸ் | 646 - 01 |
| சுயேச்சைக் குழு | 568 - 01 |

### முசலி பிரதேச சபை

| | |
|---|---|
| ஐக்கி[illegible]சக்தி | 3,767 - 05 |
| இலங்[illegible]ளர் கட்சி | 2,441 - 04 |
| தேசி[illegible] | 2,132 - 03 |
| ஸ்ரீல[illegible]லிம் காங்கிரஸ் | 1,482 - 02 |
| சுயே[illegible] | 611 - 01 |
| ஜனநா[illegible]தேசிய கூட்டணி | 551 - 01 |

### [illegible]டான் பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய ம[illegible] | 4,518 - 06 |
| தமிழ[illegible] | 3,006 - 04 |
| ஐக்கி[illegible]சக்தி | 1,856 - 02 |
| சுயே[illegible] | 380 - 02 |
| ஜனநாயக த[illegible] தேசிய கூட்டணி | 1,314 - 02 |
| இலங்கைத் [illegible]ளாளர் கட்சி | 747 - 01 |

### மாந்தை மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 3,218 - 05 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,842 - 04 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,792 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,416 - 04 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 1,330 - 02 |
| தமிழ்க் காங்கிரஸ் | 700 - 01 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 492 - 01 |

### மன்னார் நகர சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,255 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,123 - 03 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,943 - 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,807 - 02 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,439 - 02 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 584 - 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 535 - 01 |

# [illegible]ளூராட்சித் [illegible]தல் 2025 - [illegible]நொச்சி [illegible] முடிவுகள்

### [illegible]பள்ளி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழ[illegible] | 3,040 - 05 |
| ஜனநா[illegible]தேசிய கூட்டணி | 1,511 - 03 |
| தேசி[illegible] | 1,349 - 03 |
| தமி[illegible] | 508 - 01 |

### பூநகரி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,171 - 10 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,355 - 03 |
| தேசிய மக்கள் சக்தி | 1,884 - 03 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 971 - 01 |
| சுயேச்சைக் குழு 01 | 632 - 01 |
| சுயேச்சைக் குழு 02 | 486 - 01 |
| தமிழ்க் காங்கிரஸ் | 325 - 01 |

### பூநகரி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,171 - 10 |
| தேசிய மக்கள் சக்தி | 2,355 - 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,884 - 03 |
| தமிழ்க் காங்கிரஸ் | 971 - 01 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 632 - 01 |
| சுயேச்சைக் குழு | 486 - 01 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 325 - 01 |

# உள்ளூராட்சித் தேர்தல் 2025 - வவுனியா மாவட்ட முடிவுகள்

### வவுனியா மாநகர சபை

| | |
|---|---|
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,350 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,344 - 04 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 2,293 - 04 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 2,185 - 03 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,088 - 02 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 647 - 01 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | 630 - 01 |
| சுயேச்சைக் குழு 01 | 332 - 01 |
| சுயேச்சைக் குழு 02 | 326 - 01 |

### வவுனியா வடக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 2,650 - 06 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 2,210 - 05 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,696 - 04 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,255 - 03 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 967 - 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 956 - 02 |
| சர்வஜன அதிகாரம் | 317 - 01 |

### செங்கலடி செட்டிக்குளம் பிரதேச சபை

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,838 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,085 - 03 |
| தமிழரசுக் கட்சி | 1,957 - 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,661 - 02 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 1,573 - 02 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | 1,225 - 02 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 626 - 01 |
| சுயேச்சைக் குழு 02 | 340 - 01 |

### வவுனியா மாநகர சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 3,645 - 07 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,844 - 04 |
| சர்வஜன அதிகாரம் | 758 - 01 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 662 - 01 |
| சுயாதீனக் குழு 02 | 606 - 02 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 436 - 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 338 - 01 |

### வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 7,260 - 06 |
| இலங்கைத் தமிழரசுக் | 7,033 - 05 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 3,949 - 03 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,870 - 03 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 3,436 - 02 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | 2,075 - 02 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,901 - 01 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,482 - 01 |
| சுயாதீனக் குழு 02 | 1,285 - 01 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,173 - 01 |
| சர்வஜன அதிகாரம் | 1,123 - 01 |
| சுயாதீனக் குழு 03 | 768 - 01 |

# உள்ளூராட்சித் தேர்தல் 2025 - முல்லைத்தீவு மாவட்ட முடிவுகள்

### துணுக்காய் பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக்கு கட்சி | 1,549 - 04 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,082 - 02 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 804 - 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 605 - 01 |
| தேசிய மக்கள் சக்தி | 432 - 01 |
| சிறிலங்கா தொழிலாளர் கட்சி | 254 - 01 |
| சுயேச்சை | 388 - 01 |

### புதுக்குடியிருப்பு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக்கு கட்சி | 10,816 - 11 |
| தேசிய மக்கள் சக்தி | 4,028 - 04 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 2,652 - 02 |
| சுயேச்சைக் குழு | 2,491 - 02 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,174 - 01 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,025 - 01 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | 658 - 01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இது வெறும் ஆரம்பம்தான்"

## தேர்தல் குறித்து நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மே. 08

**"இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்." என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து நாமல் ராஜபக்ஷ தனது ருவிட்டர் தளத்தில் கருத்தொன்றைப் பதிவிட்டுள்ளார்.

"கடந்த ஆறு மாதங்களில், பொதுஜன பெரமுன மீண்டும் ஒன்றிணைந்து, எங்கள் கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பதன் மூலம் உத்வேகம் பெற்றுள்ளது.

சிலர் பொய்யான வாக்குறுதிகளை நம்பியிருந்தாலும், மக்களை முதன்மைப்படுத்தும் நேர்மையான, கொள்கை ரீதியான அரசியலுக்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

எங்களுடன் நின்ற அனைவருக்கும் நன்றி. இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்" என அவர் பதிவிட்டுள்ளார். (அ)

# நான்கு வீத வாக்குகளை 7 மாதங்களில் பெற்றோம்!

## திலித் ஜயவீர கூறுகிறார்

கொழும்பு, மே. 08

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 227 சபைகளுக்காக போட்டியிட்ட நிலையில், 226 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதாக சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மொத்தமாக போட்டியிட்ட உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கைக்கு நிகராக உறுப்பினர் எண்ணிக்கையை தாம் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணிக்கு 3 வீத வாக்குகளைப் பெற 57 வருடங்கள் சென்றது எனவும் ஆனால் தமக்கு வெறுமனே 7 மாதங்களில் 4 வீத வாக்குகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தாம் ஒரு உண்மையான நேர்த்தியான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து இருந்ததாகவும், அதற்கு மக்கள் சிறந்ததொரு பெறுபேற்றினை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# தலவத்துகொடையில் விபத்து; வயோதிபப் பெண் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 08

கொழும்பு, தலங்கமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டாவை - பொறள்ளை வீதியில் தலவத்துகொட சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தலங்கமை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பொறளையிலிருந்து கொட்டாவை நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபப் பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபப் பெண் கொஸ்வத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கண்டி - கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய வயோதிபப் பெண் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கமை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# வேட்பாளரின் மோ.சைக்கிளை தீயிட்டு எரித்த இளைஞனுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, மே. 08

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொலனறுவை மாநகர சபையில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிளைத் தீ வைத்து எரித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலன்னறுவை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலனறுவை 28ஆவது மைல்கல் பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடைய இளைஞனே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான இளைஞன் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பொலனறுவை மாநகர சபையில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தீ வைத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது வேட்பாளரின் வீட்டில் அவரது மனைவியும் பிள்ளைகளும் மாத்திரமே இருந்துள்ளனர்.

இதனையடுத்து பிரதேசவாசிகள் சிலர் இணைந்து தீ பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும், மோட்டார் சைக்கிள் மற்றும் அதற்கு அருகில் இருந்த பெறுமதியான பொருட்கள் முழுவதுமாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# யானை தாக்கி யுவதி காயம்!

கொழும்பு, மே. 08

அநுராதபுரம், அளுத்வெவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம், அளுத்வெவ அமைந்துள்ள வீடொன்றுக்கு பின்புறத்தில் உள்ள குழியில் காட்டு யானை ஒன்று விழுந்துள்ளது.

பின்னர் பிரதேசவாசிகள் சிலர் இணைந்து குழியில் விழுந்த காட்டு யானையை காப்பாற்றியுள்ளனர்.

இதன்போது திடீரென குழப்பமடைந்த யானை வீதியில் பயணித்த யுவதி ஒருவரைப் பலமாக தாக்கியுள்ளது.

காயமடைந்த யுவதி சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# மீட்டியாகொடை இரட்டைக் கொலை; மற்றுமொரு சந்தேக நபர் கைதானார்

கொழும்பு, மே. 08

காலி - மீட்டியாகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பஹிட்டிய பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றிற்கு அருகில் கடந்த 03 ஆம் திகதி இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபர் மீட்டியாகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்டியாகொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வேரகொட பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட மீட்டியாகொடை, வேரகொட பிரதேசத்தில் வசிக்கும் 46 வயதுடையவர் ஆவார்.

மீட்டியாகொடை - தம்பஹிட்டிய பிரதேசத்துக்கு இரு மோட்டார் சைக்கிளில் சென்ற சந்தேக நபர்கள் சிலர் இரண்டு நபர்கள் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேக நபர் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீட்டியாகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உள்ளூராட்சித் தேர்தல் 2025 - முல்லைத்தீவு மாவட்ட முடிவுகள்

### மாந்தை கிழக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக்கு கட்சி | 1,364 - 04 |
| தமிழ்க் காங்கிரஸ் | 808 - 02 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 500 - 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 990 - 03 |
| தேசிய மக்கள் சக்தி | 607 - 02 |

### புதுக்குடியிருப்பு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக்கு கட்சி | 6,306 - 07 |
| தேசிய மக்கள் சக்தி | 4,407 - 05 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 3,672 - 04 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,962 - 01 |
| சுயேச்சைக் குழு - 02 | 01 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | 624 - 01 |
| ஐக்கிய தேசியக் கூட்டணி | 548 - 01 |

# திருடுவதற்கு தேவாலயத்திற்குள் நுழைந்த ஒருவர் சடலமாக மீட்பு!

கொழும்பு, மே. 08

காலி - மீட்டியாகொடை பிரதேசத்தில் உள்ள சீனிகம ஸ்ரீ மகா தேவோல் தேவாலயத்தில் இருந்து நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மீட்டியாகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தேவாலயத்தில் உள்ள சிலை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த விலைமதிப்பற்ற இரத்தினத்தை திருடுவதற்காக நுழைந்திருந்த போது ஏதேனுமொரு காரணத்தினால் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தேவாலயத்தின் ஒரு ஜன்னல் உடைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் 2025 - கிழக்கு மாகாண முடிவுகள்

## தேர்தல் மாவட்டம் : திருகோணமலை

### கிண்ணியா நகர சபை

| | |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 04 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 04 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 03 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 01 |
| மக்கள் கூட்டணி | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **29,131** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **20,911** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **178** |

### திருகோணமலை மாநகர சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 09 |
| தேசிய மக்கள் சக்தி | 06 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 04 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | 01 |
| சுயேச்சை குழு(01) | 01 |
| சுயேச்சை குழு (02) | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **38,338** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **23,827** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **406** |

### திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 04 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 03 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 01 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 02 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 01 |
| சுயேச்சை குழு (01) | 01 |
| சுயேச்சை குழு (05) | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **35,617** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **22,468** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **498** |

### சேருவில பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 07 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 03 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 01 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 01 |
| சர்வஜன அதிகாரம் | 01 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (01) | 01 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன (05) | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **11, 859** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **8,125** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **90** |

### மூதூர் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 05 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 04 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 03 |
| தேசிய மக்கள் சக்தி | 03 |
| பதியப்பட்ட வாக்குகள் | **50,024** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **35,352** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **328** |

## தேர்தல் மாவட்டம் : மட்டக்களப்பு

### கோரளைப்பற்று பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 10 |
| தேசிய மக்கள் சக்தி | 04 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி | 04 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 04 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **58,318** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **34,850** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **295** |

### கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 08 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 01 |
| ஐக்கிய தேசிய கட்சி | 01 |
| சுயேச்சை குழு | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **24,659** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **15,622** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **132** |

### மண்முனை மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 10 |
| தேசிய மக்கள் சக்தி | 03 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி | 03 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 01 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 01 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **25,723** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **16,185** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **292** |

### மட்டக்களப்பு மாநகர சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 11,102 |
| தேசிய மக்கள் சக்தி | 5,860 |
| சுயேச்சை குழு | 5,325 |

### மட்டக்களப்பு - காத்தான்குடி மாநகர சபை

| | |
|---|---|
| முஸ்லிம் காங்கிரஸ் | 18,642 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 11,062 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி | 5,135 |

### மட்டக்களப்பு - ஏறாவூர் பிரதேச சபை

| | |
|---|---|
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 6,453 |
| ஐக்கிய தேசிய கட்சி | 3,538 |
| தேசிய மக்கள் சக்தி | 1,127 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,231 |

### போரதீவுப்பற்று பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 10,288 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 6,009 |
| தேசிய மக்கள் சக்தி | 3,404 |

## தேர்தல் மாவட்டம் : அம்பாறை

### அக்கரைப்பற்று மாநகர சபை

| | |
|---|---|
| தேசிய காங்கிரஸ் | 11 |
| தேசிய மக்கள் சக்தி | 04 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 03 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 01 |
| சுயேச்சை | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **27,760** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **18,192** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **114** |

### திருக்கோவில் பிரதேச சபை

| | |
|---|---|
| சுயேச்சை குழு (01) | 08 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 01 |
| சுயேச்சை குழு (02) | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **22,926** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **15,747** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **168** |

### நிந்தவூர் பிரதேச சபை

| | |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 06 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 04 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **22,944** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **16,439** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **126** |

### லகுகல பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 08 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 07 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 03 |
| பதியப்பட்ட வாக்குகள் | **8,018** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **6,355** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **61** |

### காரைதீவு பிரதேச சபை


| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 04 |
| தேசிய மக்கள் சக்தி | 03 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 02 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 01 |
| சுயேச்சை குழு | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **14,624** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **9,965** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **55** |

### நாவிதன்வெளி பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 05 |
| சுயேட்சை குழு (01) | 02 |
| சுயேட்சை குழு (04) | 02 |
| சுயேட்சை குழு (03) | 01 |
| தேசிய மக்கள் சக்தி | 01 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 01 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **17,485** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **12,296** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **118** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் மீது நள்ளிரவில் இந்தியா ஏவுகணை தாக்குதல்



லாகூர், மே 07

**பாகிஸ்தான் மீது நேற்று நள்ளிரவு இந்தியா ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. ஒப்ரேஷன் சிந்தூர் என இதற்கு பெயரிடப்பட்டுள்ளது. இதனால், இரு நாடுகள் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.**

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் கடந்த மாதம் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில், 26 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்ட லஷ்கர்இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டண்ட் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்தத் தாக்குதலை தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் உருவாகியது.

இதனிடையே, பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக நேற்று நள்ளிரவு பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் பயங்கரவாதிகளின் முகாம்களை இலக்கு வைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. ஒப்ரேஷன் சிந்தூர் என பெயரிடப்பட்ட இந்தத் தாக்குதலில் பாகிஸ்தானில் மூவர் உயிரிழந்தனர். இந்தியாவின் இந்தத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தான் மீது இந்தியா நடத்திய ஏவுகணை தாக்குதல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் வெள்ளை மாளிகையில் வைத்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அப்போது ட்ரம்ப் கூறுகையில்,

வெள்ளை மாளிகை வாசல் அருகே நடந்து வரும்போதுதான் பாகிஸ்தான் மீது இந்தியா ஏவுகணை தாக்குதல் நடத்தியது குறித்து அறிந்தோம். கடந்த காலங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது ஏதோ நடக்கப்போகிறது என்று எங்களுக்குத் தெரியும். இந்தியாவும், பாகிஸ்தானும் பல ஆண்டுகளாக சண்டையிட்டு வருகின்றன. இந்த மோதல் மிக விரைவில் முடிவுக்கு வரும் என நம்புகிறேன்- என்றார்.

(எ)

கோழைத்தனமான தாக்குதல்

# “இந்தியாவுக்கு சரியான நேரத்தில் பாகிஸ்தான் பதிலடி கொடுக்கும்”

லாகூர், மே 08



இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலுக்கு பாகிஸ்தான் தான் விரும்பும் நேரத்திலும், இடத்திலும் தக்க பதிலடி கொடுக்கும் என்று அந்த நாட்டு இராணுவ செய்தித் தொடர்பாளர் அகமது ஷரீப் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் ஒப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் வான்வழித் தாக்குதலை தொடங்கியுள்ளது இந்திய இராணுவம். பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இந்திய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஒப்ரேஷன் சிந்தூர் தாக்குதலுக்கு தாங்கள் விரும்பும் நேரத்தில் தக்க பதிலடி வழங்கப்படும் என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கோழைத்தனமான எதிரியான இந்தியா, பஹ்வல்பூரின் அகமது கிழக்குப் பகுதியில் உள்ள சுபானுல்லா மசூதி, கோட்லி மற்றும் முசாபராபாத் ஆகிய மூன்று இடங்களில் வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

எங்கள் விமானப்படையின் ஜெட் விமானங்கள் அனைத்தும் தயாராக உள்ளன. இந்தக் கோழைத்தனமான மற்றும் வெட்கக்கேடான தாக்குதல் இந்தியாவின் வான்வெளியிலிருந்து நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் ஒருபோதும் பாகிஸ்தானின் எல்லைக்குள் வந்து ஊடுருவ அனுமதிக்கப்படவில்லை. நான் சந்தேகத்துக்கு இடமின்றிச் சொல்கிறேன். பாகிஸ்தான் தான் விரும்பும் நேரத்திலும், இடத்திலும் இந்தத் தாக்குதலுக்கு தக்க பதி லடி கொடுக்கும். இந்த கொடூரமான ஆத்திரமூட்டும் தாக்குதலுக்கு நிச்சயம் பதிலளிக்கப்படும்”- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் மீண்டும் ஏவுகணை சோதனை

இஸ்லாமாபாத், மே 08

இந்தியாவுடனான போர்ப் பதற்றத்துக்கு மத்தியில், இரண்டு நாட்களில் 2ஆவது முறையாக ஏவுகணை சோதனை செய்ததாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் நீடித்து வருகிறது. இதைத் தணிப்பதற்கு உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன. அதே நேரம் பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் வகையிலான செயல்களில் பாகிஸ்தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் நீண்ட தூர ஏவுகணையான “அப்தலி” யை பாகிஸ்தான் கடந்த இரு தினங்களுக்கு முன்பாக பரிசோதித்தது. 450 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் திறன் பெற்ற இந்த ஏவுகணை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தாக்கியதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

வீரர்களின் தயார் நிலையை உறுதி செய்யவும், தொழில்நுட்ப திறனை மதிப்பிடவும் ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதாக கூறியுள்ள இராணுவம், “சிந்து பயிற்சி” யின் ஒரு பகுதியாக இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானின் இந்த ஏவுகணை பரிசோதனைக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. போர்ப் பதற்றத்துக்கு மத்தியில் நடந்துள்ள இந்தப் பரிசோதனை அப்பட்டமான ஆத்திரமூட்டும் செயல் எனவும், பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் முயற்சி என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தான் மீண்டும் ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது. 120 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் பத்தா ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்ததாக பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது. பாகிஸ்தானின் இந்தச் செயல் பதற்றத்தை மேலும் அதிகரிப்பதாக அமைந்துள்ளது.

(எ)

# பாகிஸ்தானில் பயங்கரவாதிகளின் இலக்குகளை குறிவைத்து தாக்குதல்

## இந்தியா அறிவிப்பு, பாகிஸ்தான் மறுப்பு

புதுடில்லி, மே 08

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாதிகளின் இலக்குகளைக் குறிவைத்து இராணுவத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளோம் என்று இந்தியா அறிவித்துள்ளது.

பஹல்காமில் 26 அப்பாவி உயிர்களை பறித்த பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல்களைத் திட்டமிட்ட மற்றும் நடத்திய பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாதிகளின் இலக்குகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளோம். ஒப்ரேஷன் சிந்தூர் எனும் துல்லிய தாக்குதலில், ஒன்பது இலக்குகள் குறிவைத்து தாக்கப்பட்டன என இந்தியா கூறியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத் தளங்களின் மீது இலக்கு வைக்கப்படவில்லை எனவும் மிகவும் கவனத்துடன் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

ஆனால், பாகிஸ்தான் இதை மறுத்துள்ளது. மேலும், இரு குழந்தைகள் உட்பட குறைந்தது 8 பேர் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் முகமது இஷாக் தார் கூறியுள்ளார். மேலும், இந்தத் தாக்குதலில் 35 பேர் காயமடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கிழக்கு நகரில் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும் அகமதுபூர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், ஜம்மு-காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் மேற்கொண்ட பதில் தாக்குதலில் மூன்று இந்திய பொது மக்கள் கொல்லப்பட்டதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐந்து இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கூறியுள்ளார். இந்தியாவுக்கு உரிய பதிலடி தரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், எல்லையில் பூஞ்ச்-ராஜெளரி பகுதியில் பாகிஸ்தான் பீரங்கித் தாக்குதலை நடத்தியதாக இந்தியா தெரிவித்துள்ளது.

ஆனால், பயங்கரவாத முகாம்களைக் குறிவைத்து இந்தியா தாக்குதல் நடத்தியதாகக் கூறுவது பொய் என்றும் அவை மக்கள் வாழும் பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன என்றும் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(எ)

# ஏமன் விமான நிலையம்மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

சனா, மே 08

ஏமன் விமான நிலையம் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்கு மேல் நீடித்து வருகிறது. இந்தப் போரில் 52 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவு அளித்து வருகின்றனர்.

ஹமாஸுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் உள்ள பென் குரின் சர்வதேச விமான நிலையத்தை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடந்த 4ஆம் திகதி ஏவுகணை தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 8 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது இஸ்ரேல் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. அந்த வகையில் ஏமனின் ஹூடைடா நகரில் உள்ள துறைமுகம் மீது கடந்த 5 ஆம் திகதி இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில், ஏமன் தலைநகர் சனாவில் உள்ள சர்வதேச விமான நிலையம் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் மூவர் உயிரிழந்தனர். மேலும், 38 பேர் படுகாயமடைந்தனர்.

(எ)

# கடலில் படகு கவிழ்ந்து விபத்து அமெரிக்காவில் மூவர் மரணம்

வாஷிங்டன், மே 08

அமெரிக்காவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் சாண்டிகோ நகரின் டோரி பின்ஸ் கடற்கரையிலிருந்து 15 மைல் தொலைவில் படகு விபத்துக்குள்ளானதாக கடலோர காவல் படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து விரைந்து சென்ற படையினர் நடுக்கடலில் மீன்பிடி படகு விபத்துக்குள்ளானதை கண்டுபிடித்தனர். அந்தப் படகு கடலில் கவிழ்ந்ததில் அதிலிருந்த 20இற்கும் மேற்பட்டோர் கடலில் விழுந்தனர். இதில், 4 பேரை கடலோர காவல்படையினர் உயிருடன் மீட்டனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் கடலில் மூழ்கி மூவர் உயிரிழந்தனர். மேலும், 9 பேர் மாயமாகினர். மாயமான 9 பேரையும் தேடும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

சிறிய ரக மீன்பிடி படகில் போதைப்பொருள் கடத்தி வந்தனரா? வேறு நாட்டிலிருந்து அகதிகளை ஏற்றி வந்தனரா? என்பது குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மும்பை அணியை வீழ்த்தி குஜராத் அசத்தல் வெற்றி

மும்பை, மே 08

மும்பை அணியை வீழ்த்தி குஜராத் அணி அசத்தல் வெற்றி பெற்றது.

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற 56ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 155 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக வில் ஜாக்ஸ் 53 ஓட்டங்கள் சேர்த்தார்.

இதையடுத்து 156 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் களமிறங்கியது. ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது திடீரென மழை குறுக்கிட்டது. அப்போது, குஜராத் 14 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 107 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மழை நின்றவுடன் டக் வோர்த் லூயிஸ் முறைப்படி 19 ஓவர்களில் 147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. வெற்றிபெற கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இறுதியில் 19ஆவது ஓவரில் 7 விக்கெட்களை இழந்த குஜராத் 147 ஓட்டங்கள் சேர்த்தது. இதன் மூலம் மும்பையை 3




விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி குஜராத் திரில் வெற்றிபெற்றது. இந்த வெற்றி மூலம் புள்ளிப் பட்டியலில் குஜராத் அணி முதல் இடம்பிடித்தது. (எ)



## சூர்யகுமார் புதிய சாதனை

மும்பை, மே 08

சச்சினின் மாபெரும் சாதனையை முறியடித்து சூர்யகுமார் யாதவ் வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் வெற்றி பெற்றது. இதில், மும்பை வீரரான சூர்யகுமார் யாதவ் 35 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் நடப்பு தொடரில் அவர் இதுவரை 510 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்தத் தொடரில் 500 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை கடந்ததன் மூலம் ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்காக சச்சினின் மாபெரும் சாதனையை முறியடித்து சூர்யகுமார் யாதவ் வரலாறு படைத்துள்ளார். அதாவது, ஐ.பி.எல். வரலாற்றில் மும்பை அணிக்காக அதிக முறை 500 ஓட்டங்கள் (சீசன்கள் அடிப்படையில்) அடித்த வீரர் என்ற சச்சினின் (2 முறை) சாதனையை சூர்யகுமார் யாதவ் (3 முறை) முறியடித்து சாதனை படைத்துள்ளார். (எ)

## அயர்லாந்துடன் ஒருநாள் தொடர் மே. இ. தீவுகள் அணி அறிவிப்பு

டிரினிடாட், மே 08

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி அயர்லாந்து (3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20) மற்றும் இங்கிலாந்துக்கு (3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20) சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது. இந்தத் தொடர் வரும் 21ஆம் திகதி தொடங்குகிறது. தற்போது, இந்தத் தொடர்களுக்கான மேற்கு இந்திய தீவுகள் அணி (ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கு மட்டும்) அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு இந்திய தீவுகள் அணி விவரம் வருமாறு: ஷாய் ஹோப் (தலைவர்), ஜூவல் அண்ட்ரூ, கீசி கார்டி, ரோஸ்டன் சேஸ், மத்யூ போர்ட், ஜஸ்டின் கிரீவ்ஸ், அமீர் ஜாங்கோ, அல்சாரி ஜோசப், ஷமர் ஜோசப், பிரண்டன் கிங், எவின் லூயிஸ், குடகேஷ் மோடி. ஷெர்பேன் ரூதர்போர்ட், ஜெடன் சீல்ஸ், ரொமாரியோ ஷெப்பர்ட். (எ)

# திடீரென பயிற்சியை நிறுத்தினார் டோனி

## ஓய்வை அறிவிக்க முடிவா?


கொல்கத்தா, மே 08

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இதுவரை 56 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்த நிலையில், நேற்று சென்னை - கொல்கத்தா அணிகள் மோதின. சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் இந்தத் தொடரில் இருந்து வெளியேறின. நடப்பு தொடரில் மிக மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்திய சென்னை அணி முதல் அணியாக தொடரிலிருந்து வெளியேறியது.

இந்த நிலையில், நேற்றைய ஆட்டத்துக்கான பயிற்சிகளில் எம். எஸ். டோனி கலந்து கொள்ளவில்லை. இதனால், அவர் ஓய்வு முடிவை அறிவிக்கவுள்ளதாக தகவல் வெளியானது. இது தொடர்பில் சென்னை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் எரிக் சைமன்ஸ் கூறுகையில்,

டோனி தொடர்ந்து விளையாடுவார் என எதிர்பார்க்கலாம். அவரைப் பொறுத்தவரையில் ஆட்ட சூழ்நிலை என்ன என்பது குறித்து அவருக்கு நன்றாக தெரியும். தற்போது எந்த நிலையில் இருக்கிறார் என்பதையும் நன்கு அறிவார். ஒரு போட்டிக்கு முன்பாக அவர் தன்னை தயார்படுத்திக் கொள்ள கடுமையாக உழைப்பார்.

அவர் இருக்கும் இடத்தில் தன்னை தயார்படுத்திக் கொள்வதால் தனது பயிற்சிகளை குறைத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறார். அதனால் எந்த பிரச்னையும் கிடையாது. அவர் இப்போது தயாராக இருக்கிறார்- என்றார். (எ)




# “ரி - 20 கிரிக்கெட் போட்டியில் தவறான பந்து பெருங்குற்றம்”

மும்பை, மே 08

ரி - 20 கிரிக்கெட் போட்டியில் தவறான பந்து வீசுவது பெருங்குற்றம் என்று மும்பை அணியின் தலைவர் ஹர்த்திக் பாண்டியா தெரிவித்தார்.

ஐ.பி.எல். தொடரில் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் வெற்றிபெற கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இறுதியில் 19ஆவது ஓவரில் 7 விக்கெட்களை இழந்த குஜராத் 147 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மும்பையின் தோல்விக்கு கடைசி ஓவரில் தீபக் சாஹர் வீசிய தவறான பந்து மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த போட்டியில் தோல்வி கண்ட பின்னர் மும்பை அணியின் தலைவர் கூறுகையில், நாங்கள் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தினோம் என்று நினைக்கிறேன். ஒரு குழுவாக இணைந்து வெற்றியை நோக்கி போராடினோம். நிச்சயமாக இந்த ஆடுகளத்தில் கூடுதலாக ஓட்டங்களை சேர்த்திருக்க முடியும். எனது கணிப்பின்படி மும்பை அணி 25 ஓட்டங்கள் குறைவாக எடுத்துவிட்டது.

ஆனாலும், இவ்வளவு அருகில் வந்து தோல்வியை பெறுவதற்கு பந்துவீச்சாளர்கள்தான் காரணம். இந்த போட்டியில் பிடியெடுப்புகளை தவறவிட்டோம். தவறான பந்துகளை அதிகமாக வீசிவிட்டோம் என்று நினைக்கிறேன். அதிலும் கடைசி ஓவரில் வீசிய தவறான பந்து பற்றி என்ன சொல்வதென தெரியவில்லை. ரி - 20 கிரிக்கெட் போட்டியில் தவறான பந்து வீசுவது பெருங்குற்றம் என்று கருதுவேன். ஏனென்றால் தவறான பந்து மூலம் கொடுக்கப்படும் ஓட்டங்கள் நிச்சயம் நமக்கு பின்விளைவுகளை ஏற்படுத்தும்- என்றார். (எ)



# மாபெரும் சாதனை பட்டியலில் சுப்மன் கில்




மும்பை, மே 08

ஐ.பி.எல். தொடரில் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை - குஜராத் அணிகள் மோதின.

இதில், 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் குஜராத் அணியின் தலைவர் சுப்மன் கில் அடித்த 43 ஓட்டங்களையும் சேர்த்து அவர் இந்தத் தொடரில் இதுவரை 508 ஓட்டங்கள் அடித்துள்ளார்.

இந்த நிலையில், இந்தத் தொடரில் 500 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளதன் மூலம் விராட் கோலி, ஸ்ரேயஸ் ஐயர் உடன் மாபெரும் சாதனை பட்டியலில் சுப்மன் கில் இணைந்துள்ளார். அதாவது, ஐ.பி.எல். தொடரில் ஒரு சீசனில் அணித் தலைவராக (26 வயதுக்குள்) 500 ஓட்டங்களை அடித்த 3ஆவது வீரர் என்ற சாதனையை கில் படைத்துள்ளார். இந்தப் பட்டியலில் விராட் கோலி (634 ஓட்டங், 2013), ஸ்ரேயஸ் ஐயர் (519, 2020) ஆகியோர் முதல் இரு இடங்களில் உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ஷ...

பெற்றுள்ளன.

அதன் பிரகாரம் எதிர்வரும் நாட்களில் அவர் கைது செய்யப்படக் கூடும் என்று தெரிய வருகின்றது.

அதே போன்று அவருடன் சேர்ந்து முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவும் விரைவில் கைது செய்யப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக அரசாங்கத்துக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

## எம்மை...

வல்வெட்டித்துறை நகரசபை யின் 9 வட்டாரங்களில் 7 வட்டாரங்களில் சைக்கிள் சின்னத்தில் போட்டி யிட்ட தமிழ்த் தேசிய பேரவை வெற்றி பெற்றது. இது தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தெளிவான செய்தியை சொல்லியிருக்கிறார்கள். ஜே.வி.பியின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை தவறு என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இந்த தேர்தலில் பெரு வாரியான வாக்குகளை தமிழ்க் கட்சி களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவாக காணப்படுவதால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவம் ஊடாக வருகிறார்கள். மக்கள் உறங்கியிருக்காமல் விழிப்பாக இருந்து இனப் பிரச்னைக்கான தீர்வுக்காக அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து போராடுவதற்கு அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டும் - என்றார். (அ)

## வடக்கு, கிழக்கு...

மக்கள் சக்தி பாரம்பரியமான அரசி யல் கட்சிகளை காட்டிலும் ஒப்பீட்டள வில் வெற்றி பெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தில் மாத்திரம் ஆளும் தரப்பு 150 உறுப்புரிமையை பெற்றுக்கொண்டுள்ளது.

மன்னார், வவுனியா , யாழ்ப்பாணம் ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி சிறந்த முறையில் வெற்றிபெற்றுள்ளது. ஒருசில பகுதிகளில் பெரும்பான்மை பலத்தை ஆதரவை பெற்றுக் கொண்டுள்ளோம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 81 உறுப்புரிமை கிடைக்கப் பெற்றுள்ளது. -என்றார். (அ)

## தேசிய...

930 வாக்குகளை பெற்று, 3 ஆயிரத்து 927 உறுப்பினர்களை பெற்று வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது இடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, 22 இலட்சத்து 58 ஆயிரத்து 480 வாக்குகளை பெற்று, ஆயிரத்து 767 உறுப்பினர்களை பெற்றுக்கொண்டுள்ளது.

பொதுஜன பெரமுன, 9 இலட்சத்து 54 ஆயிரத்து 517 வாக்குகள் பெற்று 742 உறுப்பினர்களை பெற்றுள்ளது. (அ)

## கூட்டணி...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஊழல் இல்லாத தேசிய சீர்திருத்த திட்டத்தை தொடர ஒரு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனி ஒரு கட்சியாக தேசிய மக்கள் சக்தி தெளிவான மற்றும் முன்னணி வெற்றியைப் பெற்றுள்ளது. இது சிறப்பு வாய்ந்தது. அதிகாரங்களை நிறுவுவதற்கு சுயாதீன குழுக்களுடன் இணைந்து செயல்பட தேசிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது.

ஆனால் வாக்காளர்களால் நிராகரிக்கப்பட்ட பிற அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைக்காது. முன்னணி கட்சியாக, எங்களுக்கு ஆட்சி செய்ய உரிமை உண்டு.

தேசிய மக்கள் சக்தி மீதான நம்பிக்கையை மக்கள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர் - என்றார். (அ)

## யாழ்....

தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம் மாநகர சபையைப் பொறுத்தவரை இலங்கை தமிழரசுக் கட்சிக்கே அதிகளவான ஆசனம் கிடைக்கப்பெற்றது. ஆகையினால் மாநகர முதல்வர் பதவி இலங்கை தமிழரசுக் கட்சிக்கே உரித்தானது. ஏனைய கட்சிகள் அதனை அனுசரித்து எமக்கான ஆதரவை கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய வேண்டுகோள். மாநகர முதல்வர் யார் என்பது குறித்து இது வரை தீர்மானிக்கவில்லை.

சாவகச்சேரி நகரசபையில் இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் இரண்டுக் கும் சமனான ஆசனம் கிடைத்திருக்கும் நிலையில் ஏனைய கட்சிகளே யார் ஆட்சியமைக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கக்கூடியதாக இருக்கும்.

வலி.வடக்கு பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியினர் கணிசமான ஆசனங்களைப் பெற்றிருக்கிறார்கள். அது தொடர்பிலும் நாம் ஆராயவேண்டும். தேசிய மக்கள் சக்தியினரால் சில வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டதாகவும் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அது தொடர்பிலும் ஆராய்வோம்.

தேர்தல் காலங்களில் இடம்பெற்ற விதிமுறை மீறல்களுக்கான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் பலமான அழுத்தத்தை கொடுப்போம். விதிமுறை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மேல் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தேயாகவேண்டும். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை பொறுத்தே இந்த ஆணைக்குழு சுயாதீனமானதா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள் - என்றார். (அ)

## வடக்கு சபைகளில்...

இடங்களைப் பெற்ற கட்சிகள் கூட அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக எமக்கு தெரிவித்துள்ளன. கட்சியின் கொள்கையின் படி நாங்கள் அதைப் பற்றி முடிவு செய்வோம் என்று அவர் குறிப்பிட்டார்.(அ)

## வவுனியா...

கடந்த முறை தமிழரசுக் கட்சி 6 உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதும் இம்முறை ஒரு வட்டாரத்தில் கூட வெற்றி பெறவில்லை.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் கட்சி என்பன தலா நான்கு ஆசனங்களைப் பெற்று வட்டாரங்களில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

இலங்க தமிழரசுக் கட்சி விகிதாசார அடிப்படையில் போனஸ் ஆசனம் மூன்றை வவுனியா மாநகர சபையில் பெற்றுள்ளது.

வடக்கில் வவுனியாவில் மட்டும் எந்தவொரு சபையில் ஆட்சி அமைக்கக்கூடிய ஆசனங்களையோ அல்லது அதிகபட்ச ஆசனங்களையோ தமிழரசுக் கட்சி பெறவில்லை என்பதுடன், முதல் நிலையையும் பிடிக்கவில்லை.

அத்துடன், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் சிக்கும் மாநகர சபையில் வட்டாரங்களில் தோல்வியடைந்து போனஸ் ஆசனம் மூன்றை மட்டும் பெற்றுக் கொண்டமை வவுனியாவில் கட்சியின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்துவதாக கட்சி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## வடக்கில் தமிழரசு...

முதன்மை பெற்றுள்ளது.

இதேநேரம், காரைநகர் பிரதேச சபையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் கூட்டணி, சுயேட்சைக்குழு ஆகியன தலா 2 ஆசனங்களையும் தமிழரசுக் கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டுளளன.

மேலும் சாவகச்சேரி நகரசபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக்கட்சி ஆகியன தலா அறு ஆசனங்களைப் பெற்று சமநிலையில் இருப்பதோடு தேசிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களையும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி இரண்டு ஆசனங்களையும், ஈ.பி.டி.பி ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

**கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்**

கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் உள்ள கரைச்சி பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ள அதே வேளை, கரைச்சி, பூநகரி ஆகியவற்றில் அக்கட்சி அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. இதனால் அவ்விரு சபைகளிலும் தமிழரசுக்கட்சி தனித்து ஆட்சி அமைக்கவுள்ளதோடு, பச்சிலைப் பள்ளி பிரேச சபையில் இரண்டாவது அதிக ஆசனங்களைக் கொண்டிருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மன்னார் தேர்தல் மாவட்டம்**

மன்னார் தேர்தல் மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களில் மன்னார் மாநகர சபை, மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகியவற்றில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முதன்மை பெற்றுள்ளது. எனினும் இம்மூன்று சபைகளிலும் ஆட்சி அமைப்பதற்கு அக்கட்சி அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. இந்நிலையில் ஆட்சியை அமைப்பதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் ஒத்துழைப்புக்களை பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, முசலிப் பிரதேச சபையில், ஐக்கிய மக்கள் சக்தியயும், நானாட்டான் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியும் முதன்மை பெற்றுள்ள போதும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை அக்கட்சிகள் கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் இலங்கைத் தொழிலாளர் கட்சி, இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் ஒத்துழைப்புகள் ஆட்சி அமைப்பதற்கு தேவையாக உள்ளன.

நானாட்டான் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி வேறெந்த தரப்புடனும் ஒன்றிணையாத பட்சத்தில் எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளதாக கூறப்படுகின்றது.

**முல்லைத்தீவு தேர்தல் மாவட்டம்**

முல்லைத்தீவு தேர்தல் மாவட்டத்தில் உள்ள கரைத்துறைப்பற்று பிரதேச சபை, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை, மாந்தை கிழக்கு பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கைத் தமிழரசுக்கட்சி முன்னிலை பெற்றுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் அறுதிப்பெரும்பான்மையை தமிழரசுக்கட்சி பெற்றுக்கொண்டுள்ளதோடு ஏனைய மூன்று சபைகளிலும் ஆட்சி அமைப்பதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கை தமிழர் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் ஒத்துழைப்புக்களைப் பெற வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வவுனியா தேர்தல் மாவட்டம்**

வவுனியா தேர்தல் மாவட்டத்தில் வவுனியா மாநகர சபையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தொழிலாளர் கட்சி ஆகியன தலா நான்கு ஆசனங்களைப் பெற்று சமநிலையில் உள்ளதோடு தமிழரசுக் கட்சி மூன்று ஆசனங்களைப் பெற்று இரண்டாம் நிலையில் உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு ஆசனங்களுடன் மூன்றாம் நிலையிலும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாய தேசியக் கூட்டணி, சுயேச்சைக்குழு ஒன்று, இரண்டு ஆகியன தலா ஒவ்வோர் ஆசனங்களையும் கொண்டுள்ளன.

இதேநேரம், வவுனியா வடக்கு பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களுடன் முன்னிலையில் உள்ள போதும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 5 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 4 ஆசனங்களையும், ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணி 3 ஆசனங்களையும் இலங்கை தொழிலாளர் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும் கொண்டுள்ளதோடு சர்வஜன அதிகாரம் ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

வெங்கலசெட்டிக்குளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி 4ஆசனங்களையும் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தேசிய மக்கள் சக்தி ஆகிய தலா மூன்று ஆசனங்களையும் ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணி ஜனநாயக தேசியக்கூட டணி இலங்கை தொழிலாளர் கட்சி ஆகியன தலா 2 ஆசனங்களையும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், சுயேச்சைக்குழு 2 ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன.

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 6ஆசனங்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 5 ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட் டணி, ஐக்கிய மக்கள் சக்தி 3 ஆசனங்க ளையும், ஜனநாயக தேசியக்கூட்டணி, இலங்கை தொழிலாளர் கட்சி ஆகியன தலா இரண்டு ஆசனங்னகளையும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், சர்வஜன சக்தி, சுயேட்சைக்குழு 2, சுயேட்சைக்குழு 3 ஆகியன தலா ஒவ்வோர் ஆனசங்களையும் பெற்றுக் கொண்டுள்ளன.

வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபையில், தேசிய மக்கள் சக்தி 7 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 4ஆசனங்களையும் சுயேச்சைக்குழு 2 இரண்டு ஆசனங்களையும் 2 இலங்கை தொழிலாளர் கட்சி பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக்கட்சி, சர்வஜன அதிகாரம் ஆகியன தலா ஒவ்வோர் ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளன.

அந்தவகையில் வவுனியா தேர்தல் மாவட்டத்தில் உள்ள எந்தவோர் உள்ளூராட்சி மன்றத்திலும் ஆட்சியை அமைத்துக்கொள்வதில் ஆகக்குறைந்தது மூன்றுக்கு மேற்பட்ட தரப்பினர் ஒன்றிணைய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (அ)

## உலக...

தந்துள்ளார்

என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்ள உலக வங்கி குழுமம் எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

டிஜிற்றல் மயமாக்கல், சுற்றுலாக் கைத்தொழில், விவசாயம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் துறை உள்ளிட்ட குறுகிய காலத்தில் பயனடையக் கூடிய துறைகளை அடையாளம் கண்டு அதனை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டுக்கு புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அந்த நோக்கத்திற்கான அரசாங்கத்தின் கொள்கைத் திட்டம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# காணாமல்போனோரின் உறவுகளின் போராட்டம் 3,000 நாள்களை எட்டியது!

## நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



வவுனியா, மே. 08

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்றுடன் 3000 நாள்களை எட்டியுள்ள நிலையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப் போரின்போதும், அதற்கு முன்னரும் காணாமல் போன தமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்டம் கடந்த 8 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் போராட்டம் ஆரம்பித்து நேற்று டன் மூவாயிரம் நாட்களைக் கடந்தது.

இதனையடுத்து நேற்று அவர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், ஐரோப்பிய அமெரிக்க கொடிகளை ஏந்தியிருந்ததுடன், தங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதை வலியுறுத்தினர். (அ)

# பிரசன்ன ரணவீர சரண்!



கொழும்பு, மே. 06

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு, போலி ஆவணங்களை தயாரித்து, கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவை கைது செய்யுமாறு நீதிமன்றத்தி னால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து பிரசன்ன ரணவீர பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று நீண்ட காலமாக தலைமறைவாக இருந்தார்.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர, நேற்று மஹர நீதவான் நீதிமன்றில் சரணடைந்ததை அடுத்து, அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# மகிந்த வாக்களிக்கவில்லை

கொழும்பு, மே. 08

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நேற்று முன் தினம் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வாக்களிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

நேற்று முன் தினம் மகிந்த ராஜபக்ஷவின் மனைவி மாத்திரமே, மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில் தனது வாக்கை பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையில், மகிந்த ராஜபக்ஷ சுகயீனம் காரணமாக அண்மையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

அதற்கமைய தற்போது வைத்திய ஆலோசனைகளின் படி, தனது வீட்டில் ஓய்வெடுத்து வருகின்றமை தெரியவந்துள்ளது. (அ)

# பொது பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான மனு நேற்றுத் தள்ளுபடி!

கொழும்பு, மே. 08

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த ரிட் மனுவை, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹிர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

குறித்த மனுவை இலங்கை பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேரா தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ராஜபக்ஷர்களின் கோட்டையை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, மே. 08

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷக்களின் கோட்டையான மெதமுலன தேர்தல் தொகுதி, 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வீழ்ந்தது.

வீரக்கெட்டிய பிரதேச சபைக்குரிய மெதமுலன தேர்தல் தொகுதியில் 1115 வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்டது. பொதுஜன பெரமுன 768 வாக்குகளை பெற்றது.

அரசியலில் மெதமுலன அதிகாரத்தை ராஜபக்ஷர்களை வைத்திருந்தனர். எனினும், இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அந்த அதிகாரம் இல்லாமல் போய் விட்டது. (அ)

# சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கூட்டுப் பணியில் ஈடுபடவேண்டும்

## சஜித் பிரேமதாஸ அழைப்பு

கொழும்பு, மே. 08

வலுவான, நேர்மையான பொது சேவையை வழங்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கூட்டுப் பணியில் ஈடுபட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்தார்.

உண்மையுள்ள நிர்வாகத்திற்கான பொதுமக்களின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக இந்த முயற்சியை வழிநடத்த ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட சஜித் பிரே மதாஸ, அவமானங்கள், அச்சு றுத்தல்கள் மற்றும் அரசியல் சதித்திட்டங்கள் இருந்தபோதிலும் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் பொய்களைப் பொதுமக்கள் நிராகரிப்பதைக் காட்டியது என்று அவர் வலியுறுத்தினார்.

இது அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வெளிப்படையான எதிர்க்கட்சி முயற்சிக்கான கோரிக்கையை சமிக்ஞை செய்கிறது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் அதிக வாக்குகளைப் பெற்ற ஆறு மாதங்களுக்குப் பின்னர் அரசாங்கம் குறிப்பிடத்தக்க சரிவைச் சந்தித் துள்ளதாகக் கூறிய அவர் அரசாங்கத்தை விமர்சித்தார்.

ஜனநாயகத்தை வலுப்படுத்தவும், கூட்டு நடவடிக்கை மூலம் பயனுள்ள கொள்கைகளை வழங்கவும் ஒரு ஐக்கிய முன்னணியை வழிநடத்தும் பொறுப்பை ஏற்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்று பிரேமதாஸ கூறினார். (அ)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதில் அரசு உறுதி!

## ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் இலங்கை எடுத்துரைப்பு

கொழும்பு, மே. 08

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யும் நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைப் பிரதிநிதிகள், சர்வதேச தராதரங்களுக்கு அமைவான புதிய சட்டத்தின் ஊடாக அதனைப் பதிலீடு செய்வதற்கு அவசியமான கால எல்லை குறித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் ஆட்சியியல் நிர்வாகம், சட்டவாட்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பணிக் குழுவின் 8 ஆவது கூட்டம் கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போது ஊழலை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகள், தொழிலாளர் உரிமைகள் உள்ளடங்கலாக மனித உரிமைகளை உறுதிப்படுத்தல், சிறுபான்மையினர், பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல், சிவில் சமூக அமைப்புக்களின் இயங்குகைக்கு அவசியமான இடைவெளியை வழங்கல், தேர்தல் செயன்முறைகளை வலுப்படுத்தல், பாலினம் மற்றும் பாலியல் நோக்கை அடிப்படையாகக்கொண்ட பாகுபாடுகளை முடிவுக்குக்கொண்டுவரல் என்பன உள்ளடங்கலாக இருதரப்பினரதும் பரஸ்பர அக்கறைக்குரிய விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு கடந்த ஆண்டு ஜனாதிபதித்தேர்தல் மற்றும் பாராளுமன்றத்தேர்தல்கள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு, அமைதியான முறையில் நடத்தப்பட்டமை குறித்து ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் இலங்கையைப் பாராட்டினர். அதற்குப் பதிலளித்த இலங்கை வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள், ஜனாதிபதித்தேர்தலின் போது ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் கண்காணிப்புப்பணிகள் தொடர்பில் தமது பாராட்டை வெளிப்படுத்தினர்.

அதேபோன்று பொருளாதார ஸ்திரத்தன்மை, மீட்சியை இலக்காகக் கொண்ட தொடர் முயற்சிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நிர்வாக மறுசீரமைப்புக்கள் உள்ளிட்ட முற்போக்கான முக்கிய நகர்வுகள் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் நேர்மறையான பிரதிபலிப்பை வெளிப்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவை வலுப்படுத்துவதற்கும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கைப் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர். அதுமாத்திரமன்றி தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியதிலிருந்து ஜனநாயக செயன்முறை, நிர்வாகம், சட்டம் ஒழுங்கு, மனித உரிமைகள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கும், வலுப்படுத்துவதற்கும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும், சர்வதேச மனித உரிமைகள்சார் நடைமுறைகளை திறம்பட அமுல்படுத்துவதற்கும் தாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக இதன்போது ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் உறுதியளித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org